# இயல் 9 - 9.4 பயணம்

பயணம்' கதையைச் சுருக்கி எழுதுக.

**முன்னுரை:**

பிறருக்கு உதவி செய்து மகிழ்ந்த ஒருவரின் கதை “பயணம்”. இக்கதையைப் “பிரயாணம்” என்னும் நூலில் பாவண்ணன் படைத்துள்ளார்.

**மிதிவண்டி ஆசை:**

20 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. அஞ்சலகத்தில் வேலை செய்து கொண்டிருந்த ஒருவர் மிதிவண்டியின் மீது ஆசை வைத்துத் தனது மூன்றாவது மாதச் சம்பளத்தில் மிதிவண்டி ஒன்றை வாங்குகின்றார். மிதிவண்டியில் செல்வது தான் அவருக்குப் பொழுதுபோக்கு. தெரிந்த இடம் தெரியாத இடம் எல்லாவற்றுக்கும் மிதிவண்டிதான்.

**மிதிவண்டியில் பயணம்:**

ஹாசன் வழியாக மங்களூர் செல்ல வேண்டும் என்பது அவரின் நீண்ட நாள் ஆசை. இரண்டு நாட்கள் மிதிவண்டிப் பயணத்தில் ஹாசனை அடைந்தார். ஒரே நாளில் வெப்பம், மழை, குளிர் மாறி மாறி வந்தது. மழைத் தூரலில் அடுத்த ஊர் சென்றார். பெரிய இறக்கத்தில் இறங்கும்போது மிதிவண்டியில் காற்று இறங்கிவிட்டது. காற்றடிக்கும் கருவியும் இல்லை. நீண்ட தூரம் நடந்தும் யாரையும் காணவில்லை.

**குடிசை வீட்டுச் சிறுவன்:**

ஒரு குடிசை வீடு தெரிந்தது. அதில் ஒரு சிறுவனும் அவனது அம்மாவும் இருந்தனர். பெங்களூரில் இருந்து மிதிவண்டியில் வந்ததைச் சொன்னதும் அந்தச் சிறுவனால் நம்ப முடியவில்லை. மனம் இருந்தால் எங்கு வேண்டும் என்றாலும் மிதிவண்டியில் செல்லலாம் என்றார்.

மிதிவண்டி ஆர்வத்தை சிறுவன் சொன்னான். அவனது மாமா வீட்டில் மிதிவண்டி உள்ளது. அவர் இல்லாத போது குரங்கு பெடல் போட்டு ஓட்டுவேன் என்றான். காலைப்பொழுது விடிந்ததும் பக்கத்து ஊரில் உள்ள சந்திரேகௌடா என்பவர் மிதிவண்டியைச் சரி செய்து தருகின்றார். சிறுவனுக்கு மிதிவண்டி ஓட்டக் கற்றுக் கொடுக்கிறார்.

**<u>பயணம் தொடர்கின்றது:</u>**

அம்மா அனுமதி பெற்று, தன் மாமா வீட்டில் விடச் சொல்லி சிறுவன் கேட்டான். சிறுவனுடன் பயணம் தொடர்ந்தது. மாமா வீடு நெருங்கும் சிறிது தூரத்திற்கு முன்னதில் இருந்து மிதிவண்டியை சிறுவன் ஓட்டக் கேட்டான். சிறுவனின் மிதிவண்டி ஆர்வத்தைக் கண்டு ஓட்டக் கொடுத்தார். சிறுவன் ஓட்டிக் கொண்டு இருக்கும் போது, அவனிடம் சொல்லாமல் பேருந்தில் ஏறிச் செல்கின்றார்.

**<u>முடிவுரை:</u>**

ஆசைப்பட்டு வாங்கிய மிதிவண்டியைத் தியாகம் செய்து, சிறுவனின் மனம் மகிழச் செய்த அவரின் கருணை உள்ளம் பாராட்டுக்குரியது.

"கருணை உள்ளம் கடவுள் வாழும் இல்லம்"